2025 ஆகஸ்ட் மாதம் 06 – ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 58/2023

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 – ஆம் தேதி புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1– வது நபரின் வாக்குமூலம்

(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. P.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | நடேஷ்பாபு |
| தகப்பனார் பெயர்: | மாரியப்பன் |
| ஊர்: | கம்பம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கிளை மேலாளர், கனரா வங்கி, கம்பம் |
| வயது : | 36 |

06.08.2025

**(சாட்சி பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

முதல் விசாரணை–

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு வங்கியின் கிளை மேலாளர் ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன் அவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

| | |
|---|---|
| 1. | 07.09.2019ம் தேதியிட்ட பண்ணை வளர்ச்சித் திட்டத்தில் கடன்பெற வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் அசல் **வா.சா.ஆ.1** |

| | |
|---|---|
| 2. | 09.09.2019 ம் தேதியிட்ட வாதி வங்கியின் அனுமதி கடிதம் அசல் **வா.சா.ஆ.2** |
| 3. | 09.09.2019 ம் தேதியிட்ட பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள கடன் ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.3. |
| 4. | 31.01.2023 ம் தேதியிட்ட பிரதிவாதியின் கணக்கு எண்.6512823000666–ன் கணக்கு அறிக்கை அசல் வா.சா.ஆ.4. |
| 5. | 31.10.2019 ம் தேதியிட்ட கிசான் கடன் அட்டைத் திட்டத்தில் கடன் பெற வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் சமர்ப்பித்த விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.5. |
| 6. | 18.11.2019 ம் தேதியிட்ட வாதி வங்கியின் அனுமதி கடிதம் அசல் வா.சா.ஆ.6. |
| 7. | 31.10.2019 ம் தேதியிட்ட பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள கடன் ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.7. |
| 8. | 31.01.2023 ம் தேதியிட்ட பிரதிவாதியின் கணக்கு எண்.18100024258O–ன் கணக்கு அறிக்கை வா.சா.ஆ.8. |
| 9. | 18.10.2004 ம் தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள பதிவு கிரைய ஆவணம் அசல் (ஆவண எண்.3763/2004) வா.சா.ஆ.9. |
| 10. | 06.09.2019 ம் தேதியிட்ட பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள ஆவண வைப்பீட்டுக் குறிப்பாணை ஆவண எண்.3739/2019 அசல் வா.சா.ஆ.10. |

நான் பிராதில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:– பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.08.2025 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.06 17:31:06 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
06.08.2025.